# 64

# நியாயத்தீர்ப்பைப் பற்றி நீங்கள் அறியவேண்டிய ஐந்து உண்மைகள்

## (20:11-15)

*ஒரு நாள் அதிகாலையில், ஒரு இளம் வழக்கறிஞர் உறங்க இயலாதவராகத், தமது எதிர்காலத்தைக் குறித்து அசைபோட்டுக் கொண்டிருந்தார். ஒருப்படுத்த இயலாத, கேள்விகள் அவரது சிந்தைக்கு வந்தன:*

*''பார்கவுன்சில் தேர்வில் வெற்றி பெற்ற பின்பு நீ என்ன செய்யப்போகின்றாய்?''*

*"சட்டத்தைப் பயிற்சியில் நடைமுறைப்படுத்துவேன்."*

*"பின்பு என்ன செய்வாய்?"*

*"நான் செல்வந்தனாவேன்."*

*"அதன் பின்பு?"*

*"நான் ஓய்வு பெறுவேன்."*

*"அதன் பின்பு?"*

*"நான் இறந்துபோவேன்."*

*"அதன் பின்பு?"*

*இந்தக் கேள்விக்குப் பதில் வருவதற்கு முன்பு சற்றே நேரம் கடந்தது, பின்பு நிதானமாகப் பின்வரும் பதில் வந்தது: "நியாயத்தீர்ப்பு."*

*நியாயத்தீர்ப்பில் தேவனை எதிர்கொள்ளுதல் பற்றி சிந்தித்தலானது அந்த இளைஞரின் வாழ்வை மாற்றியது[1] - அது உங்களுடைய வாழ்வையும் மாற்றலாம். மகாப்பெரிய இராஜதந்திரியான தானியேல் வெப்ஸ்டர் என்பவர், தாம் கொண்டிருந்த மிகவும் தனிச்சிறப்பான சிந்தனையைப் பகிர்ந்துகொள்ளும்படிக் கேட்டுக்கொள்ளப்பட்டார். அதற்கு அவர், ''தேவனிடத்தில் எனது தனிப்பட்ட பொறுப்பு என்பதுதான் எனது சிந்தையில் வந்தடைந்த மிகமுக்கியமான சிந்தனையாகும்'' என்று பதில் அளித்தார்.[2]*

*சாலொமோன், "வாலிபனே, உன் இளமையிலே சந்தோஷப்படு, உன் வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும்; உன் நெஞ்சின் வழிகளிலும், உன் கண்ணின் காட்சிகளிலும் நட; ஆனாலும்*

*இவையெல்லாவற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டுவந்து நிறுத்துவார் என்று அறி" என்று எழுதினார் (பிரசங்கி 11:9). மார்ஸ் மேடையில் பவுல், தத்துவ ஞானிகளிடத்தில், "... மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார். மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்" என்று கூறினார் (நடபடிகள் 17:30, 31). அவர் கொரிந்துவில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு, "நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிற்க வேண்டும்" என்று எழுதினர் (2 கொரிந்தியர் 5:10அ). எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், ''அன்றியும் ஒரேதரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப் படைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது'' என்று கூறினார் (எபிரெயர் 9:27).*

*வெளிப்படுத்தின விசேஷம் 20ன் முதல் பாகத்தில் நாம், சாத்தானுடைய அடைவிடத்தைக் கண்டோம். பிற்பாடு, 21, 22 ஆகிய அதிகாரங்களில் நாம், தேவனைப் பின்பற்றுபவர்களின் அடைவிடத்தைக் காண்போம். நமது தற்போதைய வசனப்பகுதியானது (20ம் அதிகாரத்தின் பிற்பகுதி) 20:1-10 மற்றும் வெளிப்படுத்தின விசேஷத்தின் கடைசி இரண்டு அதிகாரங்கள் ஆகியவற்றிற்கு இடையில் ஒரு பாலம் போன்றுள்ளது. இது, சாத்தானைப் பின்பற்றுவதை விடாதிருப்பவர்களின் அடைவிடத்தை வெளிப்படுத்துகிறது. 20:11-15ன் செய்தி - நீங்கள் உட்பட - ஒவ்வொருவருக்குமானதாக உள்ளது. இது, ''நியாயத்தீர்ப்பைப் பற்றி நீங்கள் அறியவேண்டிய ஐந்து உண்மைகளை" அறிவிக்கிறது.*

## *நியாயத்தீர்ப்பின் நாள் ஒன்று இருக்கும் (20:12)*

*12ம் வசனத்தில் நாம், ''மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக்கண்டேன் ... மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத் தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள்" என்று வாசிக்கின்றோம்.*

*நியாயத்தீர்ப்பைப் பற்றி, மத்தேயு 25:31-46ல் உள்ளது போன்ற பல சித்தரிப்புகள் வேதவசனங்களில் காணப்படுகின்றன. வெளிப்படுத்தின விசேஷம் 20ல் நியாயத்தீர்ப்பு நாள் என்பது "மிகவும் சிக்கனமான முறையில் விவரிக்கப்படுகிறது.''*[3] T. F. *கிளேஸ்ஸன் என்பவர், ''இது மிகவும் சுருக்கமானதாக இருந்தாலும், நியாயத்தீர்ப்பு பற்றி எழுதப்பட்டவற்றிலேயே மிகவும் மனதை ஈர்க்கக்கூடியதாக உள்ளது"*[4] *என்று கூறினார்.*

*ஒருவேளை நான், கடைசி நியாயத்தீர்ப்பு நாளைப் பற்றி வெளிப்படுத்தின விசேஷம் 20:11-15 பேசுகிறது என்று முதலில் நிலைநாட்ட வேண்டியிருக்கும். இது ரோமாபுரியின்மீது விழுந்ததான தற்காலிகமான நியாயத்தீர்ப்பு பற்றிய இன்னொரு அடையாளத்துவக் குறிப்பாக மாத்திரம் உள்ளது என்று சிலர் நினைக்கின்றனர். அது சாத்தியமானதாகவே உள்ளது,*[5] *ஆனால் இவ்விடத்தில் காட்சியில் உள்ளது கடைசி நியாயத்தீர்ப்புதான் என்று பல எழுத்தாளர்கள் நம்புகின்றனர் - நானும் அதை*

*ஒப்புக்கொள்கின்றேன். பின்வருபவற்றை ஆழ்ந்து சிந்தியுங்கள்:*

*(1) வெளிப்படுத்தின விசேஷத்தில் உள்ள வேறு எந்த நியாயத்தீர்ப்புக் காட்சிக்கு முன்னதாகவும் இல்லாத சிலவிஷயங்கள், இந்த நியாயத்தீர்ப்புக் காட்சிக்கு முன்னதாக உள்ளன: சாத்தானைத் தள்ளி அடைத்தல் (20:10). இந்தத் தற்கால யுகத்தின் முடிவு வரையிலும் சாத்தான் நரகத்தில் தள்ளி யடைக்கப்படமாட்டான்.*

*(2) இவ்வசனப்பகுதியானது கடைசி நியாத்தீர்ப்பின் நாளுக்கான அடிப்படைக் கூறுகளைக் கொண்டுள்ளது: மரித்தோர் உயிர்ப்பிக்கப் படுகின்றனர்; நியாயந்தீர்க்கப்படும்படி ஒவ்வொருவரும் கர்த்தருக்கு முன்பாக நிற்கின்றனர். துன்மார்க்கர் நரகத்திற்குச் செல்லுகின்றனர், அதேவேளையில் நீதிமான்கள் பரலோகத்திற்குச் செல்லுகின்றனர் (மத்தேயு 25:34, 41, 46 ஆகிய வசனங்களைக் காணவும்). ரூபெல் ஷெல்லி என்பவர், ''இவ்விடத்தில் உள்ள நியாயத்தீர்ப்பின் காட்சியானது, அந்த நாளைப்பற்றிப் புதிய ஏற்பாட்டின் எஞ்சிய பகுதியில் வெளிப்படுத்தப் பட்டுள்ள மற்ற ஒவ்வொரு உண்மையுடனும் சீர்பொருந்தியுள்ளது''[6] என்று கூறினார்.*

*(3) வெளிப்படுத்தின விசேஷத்தில் உள்ள நியாயத்தீர்ப்பு பற்றிய வேறு எந்தக் காட்சியும் உள்ளடங்கியிராத இன்னொரு கூறு இந்தக் காட்சியில் உள்ளடங்கியிருக்கிறது: மரணம் நீக்கப்படுதல் (20:14). மரணம் என்பது கிறிஸ்துவின் தற்போதைய யுகத்தின் முடிவு வரையிலும் நீக்கப்படாது (1 கொரிந்தியர் 15:25, 26).*

*(4) வெளிப்படுத்தின விசேஷம் புத்தகமானது ஒரு உச்சக்காட்சியை நோக்கிக் கட்டியெழுப்பப்பட்டிருக்கிறது. 20முதல் 22வரையுள்ள அதிகாரங்கள் ''ஏறக்குறைய ஒரே மாதிரியானவைகளாக'' இருந்தால், இப்புத்தகம் ஒரு எதிர் உச்சக் காட்சியுடன் முடிவடைகிறது. W. B. வெஸ்ட் ஜுனியர் என்பவர், ''20ம் அதிகாரத்தின் கடைசிப்பகுதியிலும், 21 மற்றும் 22 ஆகிய அதிகாரங்களிலும்தான் வெளிப்படுத்தின விசேஷத்தின் முடிவு உள்ளது. இவைகள் ஒரு முற்றான உச்சக்காட்சியை முன்வைக்கின்றன. இவையில்லாத நிலையில் இப்புத்தகம் முடிவற்றதாக உள்ளது''[7] என்று எழுதினார். இந்தக் காரணங்களினால், 20:11-15 வசனப்பகுதியானது நியாயத்தீர்ப்பின் கடைசிநாளைப் பற்றிப் பேசுகிறது என்று நான் முடிவுசெய்கின்றேன்.*

*மகா நியாயத்தீர்ப்பின் நாள் என்று ஒரே ஒரு நாளைப் பற்றியே வேதாகமம் பேசுகிறது என்பதை நான் வலியுறுத்தியாக வேண்டும். ஆயிரம் ஆண்டு அரசாட்சிக்கு முன் இரண்டாம்வருகை கொள்கைக்காரர்கள், பல உயிர்த்தெழுதல்கள் உண்டு என்று போதிப்பது பற்றி நான் முன்னதாக குறிப்பிட்டிருந்தேன். பெரும்பான்மையானவர்கள், பல நியாயத்தீர்ப்பு நாட்கள் உள்ளன என்றும்கூடப் போதிக்கின்றனர்.[8] இருப்பினும், வேதாகமமானது, ஒரே ஒரு நியாயத்தீர்ப்புநாள் உண்டு என்றே போதிக்கிறது. இயேசு அடிக்கடி, ''கடைசி நாள்'' என்பது பற்றிப் பேசினார் (யோவான் 6:39, 40, 44, 54): நீதிமான்கள் ''கடைசி நாளில்'' உயிர்ப்பிக்கப்படுவார்கள் (யோவான் 11:24), மற்றும் துன்மார்க்கரும்*

"கடைசி நாளில்" நியாயந்தீர்க்கப்படுவார்கள் (யோவான் 12:48). மரித்தோர் உயிர்ப்பிக்கப்படும் "கடைசிநாள்," என்பது ஒன்றே ஒன்றுதான் இருக்க முடியும், அப்போது ஒவ்வொருவருமே நியாயத்தீர்ப்பை எதிர் கொள்ளுவார்கள்.

நியாயத்தீர்ப்பின் நாள் ஒன்று இருக்கும் என்பதே நியாயத்தீர்ப்பைப் பற்றி நீங்கள் அறிய வேண்டிய முதல் உண்மையாக உள்ளது. எட்வர்டு மெக்டாவெல் என்பவர், "நமது பிரசங்கித்தலில் நாம் ... வரலாற்றில் தேவனுடைய கரம், வரலாற்றில் ஒரு இலக்கு மற்றும் நிறைவேற்றம் நோக்கிய அவரது இயக்குதல் ஆகியவை பற்றிய உணர்வை அதிகமாகத் தொலைத்துவிட்டோம். நமக்கு தேவன் கொண்டுவருகிற நிறைவேற்றம் உண்டு என்பது பற்றிய தெளிவான உறுதிப்பாடு அவசியமாகிறது"[9] என்று எழுதினார். நியாயத்தீர்ப்பின் நாள்தான் அந்த "நிறைவேற்றமாக" உள்ளது. இந்த பூமியில் வாழ்வு என்பது அந்த உச்சக்காட்சியை நோக்கிப் பாய்ந்தோடிக்கொண்டிருக்கிறது. உலகத்தின் வரலாறு அந்த ஒரு கணத்திற்கு இறங்கி வரும்.[10]

## கர்த்தர் உங்கள் நியாயாதிபதியாய் இருப்பார் (20:11)

அந்த நாளைப் பற்றி யோவான் தமது விவரிப்பைத் தொடங்குகையில், பின்பு, "நான் பெரிய வெள்ளைச் சிங்காசனத்தையும் அதின்மேல் வீற்றிருக்கிறவரையும் கண்டேன்" என்று அவர் கூறினார் (வசனம் 11அ). இந்தச் சிங்காசனத்தை நாம் முதலில் 4ம் அதிகாரத்தில் கண்டோம்: அண்டத்தின் மையத்தில் உள்ள சிங்காசனம். இவ்விடத்தில் இது "வெண்மைநிறமானது" என்று விவரிக்கப்படுகிறது, ஏனெனில் இதில் அமர்ந்திருப்பவர் பரிசுத்தராய் இருக்கின்றார், இது "பெரியது" என்று அழைக்கப்படுகிறது, ஏனெனில் இது மற்ற எல்லாச் சிங்காசனங்களுக்கும் மேலாக உள்ளது.

"இதில் அமர்ந்திருப்பவர்" யார்? இந்தச் சிங்காசனம் "தேவனுடைய நியாயத்தீர்ப்பின் ஆசனம்" என்று அழைக்கப்படுகிறது (வெளிப்படுத்தின விசேஷம் 14:10), மற்றும் இது "கிறிஸ்துவின் நியாயாசனம்" என்றும் அழைக்கப்படுகிறது (2 கொரிந்தியர் 5:10). பிதாவும் குமாரனும் ஆகிய இருவருமே இந்தச் சிங்காசனத்தில் வீற்றிருக்கின்றனர்,[11] மற்றும் இருவரும் நியாயத்தீர்ப்பில் ஈடுபட்டுள்ளனர். "மேலும் (தேவன்) ஒரு நாளைக்குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார்" என்று பவுல் கூறினார் (நடபடிகள் 17:31). மீண்டுமாகப் பவுல், "தேவன் இயேசுகிறிஸ்துவைக் கொண்டு மனுஷருடைய அந்தரங்கங்களைக் குறித்து நியாயத்தீர்ப்புக்கொடுப்பார்" என்று எழுதினார் (ரோமர் 2:16).[12]

சிங்காசனத்தில் வீற்றிருப்பவரைப்பற்றி யோவான், "அவருடைய

*சமூகத்திலிருந்து பூமியும் வானமும் அகன்று போயின; அவைகளுக்கு இடம்காணப்படவில்லை'' என்று கூறினார் (வசனம் 11ஆ). இந்தக்கூற்றானது, "நமது உலகப்பிரகாரமான உணர்புலன்கள் மூலம் நாம் அறிந்துள்ள பிரபஞ்சத்தின் (பெருவெளியின்)" முடிவைக் குறிக்கலாம்.[13] இயேசு, "வானமும் பூமியும் ஒழிந்து போகும்" என்று கூறினார் (மத்தேயு 5:18). பேதுரு, "கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம்; பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்" என்று எழுதினார் (2 பேதுரு 3:10).[14] அடுத்த அதிகாரத்தில் நாம் காணப்போகின்றபடி, "முதலாம்" வானம் மற்றும் பூமி ஆகியவற்றை நீக்கிப்போடுதலானது ''புதிய'' வானம் மற்றும் பூமி ஆகியவற்றைச் சாத்தியமாக்கும் (21:1).*

*இருப்பினும், சந்தர்ப்பப்பொருளில், வலியுறுத்தமானது கர்த்தருடைய மகிமையின்மீது இருப்பதைவிட அதிகமாக, அண்டத்தின் அழிவின்மீது இருப்பதில்லை. "சிங்காசனத்தின்மீது அமர்ந்திருந்தவர், சூரியனைக்கண்ட பனித்துளிப்போல் பூமியும் வானமும் மறைந்துபோகும்படியான அதிகக் கதிரொளியும் ஆகர்ஷண சக்தியும் கொண்டிருந்தார்."[15]*

*கர்த்தர் நியாயாதிபதியாக இருப்பார் என்பது நியாயத்தீர்ப்பைப் பற்றி நீங்கள் அறிய வேண்டிய இரண்டாவது உண்மையாக உள்ளது. விபசாரி யொருத்தியிடம் அவளது ஜெபவாழ்வு பற்றிப் பேட்டி காணப்பட்டது. கேள்விகளுக்குப் பதில் அளிக்கையில் அவள், ''[தேவன்] என்னை நியாயந்தீர்க்கப்போவதில்லை.தேவன் எவரொருவரையும் நியாயந்தீர்ப்பார் என்று நான் நினைக்கவில்லை''[16] என்று கூறினாள். அந்த நம்பிக்கையானது அவளை ஆறுதலாக உணரச்செய்தது - ஆனால் அது தவறான நம்பிக்கையாய் இருந்தது. நியாயத்தீர்ப்பில், கர்த்தர் நியாயந்தீர்ப்பார், மற்றும் "அவருடைய நியாயத்தீர்ப்புகள் சத்தியமும் நீதியுமானவைகள்" (19:2).*

## *நீங்கள் அங்கிருப்பீர்கள் (20:12, 13)*

*தொடர்ந்து யோவான், ''மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்குமுன்பாக நிற்கக்கண்டேன்" என்று எழுதினார் (வசனம் 12அ). நியாயத்தீர்ப்பில்கூட, "தேவனிடத்தில் பட்சபாதம் இல்லை" என்ற நிலையே இருக்கும் (ரோமர் 2:11; நடபடிகள் 10:34ஐக் காணவும்). "முக்கியமானவர்கள்" மற்றும் "முக்கியமற்றவர்கள்" எனப்படும் யாவரும் நியாயத்தீர்ப்புப் பெறும்படிக்கு அழைக்கப்பட்டுள்ளனர். "வராதவர்கள் என்று யாரும் இருக்கமாட்டார்கள் மற்றும் விதிவிலக்குகள் என்று எதுவும் இருக்காது."[17]*

*அடுத்த வசனம், "சமுத்திரம் தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தது, மரணமும் பாதாளமும்[18] தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தன" என்று கூறுகிறது (வசனம் 13அ). வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம் முழுவதிலும், மரணமும் பாதாளமும் இணைந்தே வருகின்றன (1:18; 6:8). " 'மரணம்' என்பது மனிதனின் பொதுவான முடிவாக உள்ளது ... மற்றும் 'பாதாளம்'*

*என்பது அவர்களின் பொதுவான அடைவிடமாக உள்ளது, ...''[19] "மரணம்'' என்பவன் 6ம் ("நான்காவது குதிரையில் ஏறியிருந்தவன்'' என்ற விளக்க படத்தைக் காணவும்.) அதிகாரத்தில் நான்காவது குதிரையின்மீது ஏறியிருந்தவன் என்பதையும், அவனை "பாதாளம்'' பின்தொடர்ந்தது என்பதையும் நீங்கள் நினைவில் வைத்திருக்கலாம்.[20]*

*உலகத்தின் வரலாற்றினூடே, மரணம் என்பது மனிதர்களின் உடல்களை உரிமைகோருவதாக இருக்கையில், பாதாளம் என்பது அவர்களின் ஆத்துமாக்களை உரிமைகோரியுள்ளது. அந்த "கடைசி மகா நாளில்'' மரணமும் பாதாளமும், தாங்கள் பிடித்து வைத்துள்ள உடல்களையும் ஆத்துமாக்களையும் விடுவிக்கவேண்டும் என்று கட்டாயப் படுத்தப்படும்.*

*சமுத்திரத்தில் மரித்தவர்களின் உடல்களும் ஆத்துமாக்களும், நிலத்தில் மரித்தவர்களுடையவை போன்றே மரணம் மற்றும் பாதாளம் ஆகியவற்றினிடமே இருக்கின்றன என்பதால் "சமுத்திரம் தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தது'' என்ற வார்த்தைகள் புதிரைப்போன்றுள்ளன. குறியீடு போன்ற இவ்வார்த்தைகள், சரியான முறையில் அடக்கம் பண்ணுதல் - அதாவது, கடலில் காணாமற்போனவர்கள் பெற்றுக் கொள்ளாத அடக்கத்தைப் பெறச்செய்தல் - என்பது இந்த வாழ்விற்குப் பின்பு ஒருவருடைய இருப்பு பற்றிய விஷயத்தில் மிகவும் முக்கியமானதாக இருந்தது என்ற பழங்காலக் கருத்தைப் பிரதிபலித்தன என்று பல எழுத்தாளர்கள் நினைக்கின்றனர். இவ்விதமாக, 20:13ன் வார்த்தைகள், மரித்த யாவரையும், அவர்கள் எங்கே அல்லது எப்படி மரித்திருப்பினும், தேவன் உயிரோடே எழுப்பக்கூடும் மற்றும் எழுப்புவார் என்ற உறுதிப்பாட்டை அளிக்கின்றன. இந்த வார்த்தைகள் எதை அர்த்தப்படுத்தினாலும்,[21] ஒருவருமே நியாயத்தீர்ப்பில் இருந்து தப்பிக்க இயலாது என்பதே செய்தியாக உள்ளது.*

*சமுத்திரம், மரணம் மற்றும் பாதாளம் ஆகியவை தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தன என்பது, மரித்தோரில் இருந்து உயிர்த்தெழுதல் பற்றிப் பேசுவதின் உருவகமான மொழிநடையாக உள்ளது. இயேசு, "பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்; அப்பொழுது நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும் படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்'' என்று கூறினார் (யோவான் 5:28, 29). பவுலின் கூற்றுப்படி, "நீதிமான்களும் அநீதி மான்களுமாகிய மரித்தோர் உயிர்த்தெழுந்திருப்பது உண்டு'' (நடபடிகள் 24:15).[22] கிறிஸ்து மறுபடியும் வரும்போது, "மரித்தோர் உயிர்ப் பிக்கப்படுவார்கள்,'' உயிருடன் இருப்பவர்கள் "மறுரூபமாக்கப்படுவார்கள்'' (1 கொரிந்தியர் 15:52), அதன்பின்பு ஒவ்வொருவரும் நியாயத்தீர்ப்பை எதிர்கொள்வார்கள்.*

*நீதிமான்கள் நியாயத்தீர்ப்பு நாளில் சிங்காசனத்தின்முன்பு நிற்பார்கள் என்ற கருத்தைச் சிலர் மறுக்கின்றனர்; அந்த மாபெரும் நிகழ்ச்சி துன்மார்க்கருக்கு மாத்திரம் உரியது என்று அவர்கள் வலியுறுத்துகின்றனர்.[23]*

*வெளிப்படுத்தின விசேஷம் 20:11-15ல் அவிசுவாசிகளின் முடிவின்மீதே வலியுறுத்தம் உள்ளது என்பதை நான் ஒப்புக்கொள்கின்றேன்,[24] ஆனால் இவ்வசனப்பகுதியின்[25] விபரங்கள், நீதிமான்கள் மற்றும் அநீதிமான்களாகிய யாவருக்கும் நியாயத்தீர்ப்புநாள் உள்ளது என்ற பொதுவான வேதாகம போதனையுடன் ஒருமித்துள்ளன.*

*கிறிஸ்தவர்களுக்குப் பவுல், "ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலன் அடையும்படிக்கு நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும்" என்று எழுதினார் (2 கொரிந்தியர் 5:10). அவர், ரோமர் 2:6-8ல் கர்த்தருடைய நீதியான நியாயத்தீர்ப்பின் "நாளில்" என்ன நடைபெறும் என்பது பற்றிப் பின்வரும் விவரிப்பைக் கொடுத்தார்:*

> *தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத்தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார். சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பார். சண்டைக்காரராயிருந்து, சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமல், அநியாயத்திற்குக் கீழ்ப்படிந்திருக்கிறவர்களுக்கோ உக்கிரகோபாக்கினை வரும் (வசனங்கள் 9, 10ஐக் காணவும்).*

*நியாயத்தீர்ப்பு "தேவனுடைய வீட்டிலே தொடங்கும்" என்று பேதுரு குறிப்பிட்டார் (1 பேதுரு 4:17). மத்தேயு 25ல், நற்செயல்களைச் செய்திருந்தவர்கள், நற்செயல்களைச் செய்யத் தவறியிருந்தவர்களுடன் சேர்ந்தே நியாயந்தீர்க்கப்படுகின்றனர் (மத்தேயு 25:31-46). வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம்கூட, மரித்தவர்கள் நியாயந் தீர்க்கப்படும் பொதுவான காலவேளையில்தான் உண்மையுள்ள வர்களுக்குப் பலன் அளிக்கப்படும் என்று சுட்டிக்காண்பிக்கிறது (வெளிப்படுத்தின விசேஷம் 11:18). ஒரு நாளிலே நாம் எல்லாரும் தேவனை எதிர்கொள்ள வேண்டும் என்பதே வேதவசனங்களின் போதனையாக உள்ளது.[26]*

*இது, நியாயந்தீர்ப்பைப் பற்றிய ஒவ்வொன்றையும் நாம் அறிந்துள்ளோம் என்று அர்த்தப்படுத்துகிறதா? என்ன நடைபெறும் என்பதை நாம் மிகச் சரியாக அறிந்துள்ளோம் என்று இது அர்த்தப் படுத்துகிறதா? இது, நியாயத்தீர்ப்பைப் பற்றி உள்ளடங்கியிருக்கும் ஒவ்வொரு சிரமத்தையும் நாம் தீர்த்துவைக்க முடியும் என்று அர்த்தப்படுத்துகிறதா?[27] இல்லை, இல்லை, இல்லை. இந்த வாழ்வுக்குப் பின்னால் இருக்கும் விஷயங்களைப் பற்றி நாம் கலந்துரையாடுகையில், கருப்பைக்கு அப்பால் உள்ள வாழ்வின் இயல்பைப் பற்றிக் கலந்துரையாடும் இன்னும் பிறக்காத குழந்தைகளைப்போல் இருக்கின்றோம். இருந்தாலும், நாம் எதை அறிய வேண்டும் என்று தேவன் நோக்கங்கொண்டுள்ளாரோ, அதை நாம் அறிய முடியும்: நியாயத்தீர்ப்பின் நாள் ஒன்றிருக்கும், அங்கு ஒவ்வொரு நபரும் இருப்பார், ஒவ்வொரு நபரும் நியாயந்தீர்க்கப்படுவார்!*

*நீங்கள் அங்கிருப்பீர்கள் என்பது நியாயத்தீர்ப்பைப் பற்றி நீங்கள் அறிய வேண்டிய மூன்றாவது உண்மையாக உள்ளது.*

## *உங்கள் செயல்களுக்குத் தக்கவாறு நீங்கள் நியாயந்தீர்க்கப்படுவீர்கள் (20:12, 13, 15)*

*யோவான் கண்ட தரிசனத்தில், சிங்காசனத்திற்கு முன்பாகத் திரளான மக்கள் கூட்டம் நின்றுகொண்டிருக்கையில், ''புஸ்தகங்கள் திறக்கப்பட்டன''[28] மற்றும் "அந்த புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின் படியே, மரித்தோர் ... நியாயத்தீர்ப்படைந்தார்கள்" (வசனம் 12ஆ, ஈ).*

**தேவனுடைய வசனம்**

*திறக்கப்பட்ட ''புத்தகங்கள்'' பற்றிய விரிவான விபரங்களை, வசனப்பகுதி தருவதில்லை, ஆனால் அவற்றினூடே தேவனுடைய வசனங்களே சிறப்புற விளங்கும் என்பது பற்றி நாம் நம்பிக்கையாய் இருக்க முடியும். இயேசு, ''என்னைத் தள்ளி என் வர்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும்'' என்று கூறினார் (யோவான் 12:48). நாம், மனிதர்களுடைய எழுத்துக்களின்படியல்ல - வேதாகமத்தின்படி மட்டுமே நியாயந்தீர்க்கப்படுவோம்.*

***நமது செயல்கள் பற்றிய பதிவேடு***

*புத்தகங்கள் சிலவற்றில், மக்களின் வாழ்வு (அவர்களின் சிந்தனைகள், அவர்களின் வார்த்தைகள், மற்றும் அவர்களின் செயல்கள்) பற்றிய பதிவேடு அடங்கியுள்ளது என்பது தெளிவு, ஏனெனில் மரித்தோர் "தங்கள் தங்கள் கிரியைகளுக்குத் தக்கவாறு" நியாயந்தீர்க்கப்படுவார்கள் என்று இருமுறை நமக்கு கூறப்பட்டுள்ளது (வசனம் 12ஈ, 13ஆ).*

*நமது செயல்களுக்குத் தக்கவாறு நாம் நியாயந்தீர்க்கப்படுவோம் என்ற கருத்தைச் சிலர் மறுக்கின்றனர், ஆனால் அந்தக் கொள்கையானது வேதாகமம் முழுவதிலும் போதிக்கப்பட்டுள்ளது. ஞானியான மனிதர், "ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும் தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டுவருவார்" என்று கூறினார் (பிரசங்கி 12:14). நியாயத்தீர்ப்பின் நாளில் தேவன், "அவனவனுடைய கிரியைகளுக்குத் தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார்" என்று பவுல் எழுதினார் (ரோமர் 2:5, 6). இயேசு தமது தூதர்களுடன் மகிமையில் வரும்போது, அவர் "அவனவன் கிரியைக்குத் தக்கதாக அவனவனுக்குப் பலனளிப்பார்" என்று அவரே கூறினார் (மத்தேயு 16:27). அவர் (இயேசு), தியத்தீராவில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு, "உங்களில் ஒவ்வொருவனுக்கும் உங்கள் கிரியைகளின் படியே பலனளிப்பேன்" என்று கூறினார் (வெளிப்படுத்தின விசேஷம் 2:23).[29]*

*யாரேனும் ஒருவர், "ஆனால் நம்மில் எவரும் இரட்சிக்கப்படுவதற்குப் போதுமான நற்செயல்களைச் செய்ய இயலாதே" என்று மறுப்புரைக்கலாம். அது உண்மையே (எபேசியர் 2:8, 9); ஆனால், இராபர்ட் மவுன்ஸ் என்பவர் வலியுறுத்தியபடி, "இங்கு கிரியைகளினால் இரட்சிப்பு என்பது விஷயமாக இருப்பதில்லை, ஆனால் தேவனுடன் மனிதருக்குள்ள உண்மையான உறவு*

*பற்றிய மறுக்க முடியாத ஆதாரமே கிரியைகளாக உள்ளன என்பதே விஷயமாக உள்ளது.''*[30] *நமது கிரியைகள் நமது விசுவாசத்தைக் காண்பிக்கின்றன (யாக்கோபு 2:18), நமது அன்பை விளக்கப்படுத்துகின்றன (யோவான் 14:15; 1 யோவான் 5:3), மற்றும் கர்த்தருக்கான நமது பதில்செயலை நிறைவு செய்கின்றன (யாக்கோபு 2:21, 22; எபேசியர் 2:10).*

*"பதிவேட்டில் எழுதும் தூதர்கள்" என்பவர்கள் நாம் சொல்லுகின்ற அல்லது செய்கின்ற ஒவ்வொன்றையும் எழுதிவைக்கின்றனர் என்று சிலர் கற்பனை செய்துள்ளனர். இந்தப் புத்தகங்கள், ''ஏதொன்றும் அறியப்படாதாயிராதவரும் ஏதொன்றும் மறக்கப்படுகிறதாயிராதவருமான நியாயாதிபதியாகிய தேவனுடைய சர்வஞானத்திற்காக நிலைநிற்கக்கூடும்.''*[31]

*ஒவ்வொருவருடைய வாழ்வும் பரலோகத்தில் "பதிவுசெய்யப்பட்டு" இருக்கிறது என்ற உண்மை, இரு விஷயங்களைக் கூறுகிறது: இது நாம் ஒவ்வொருவரும் முக்கியமானவர்கள், இது நாம் செய்கின்ற ஒவ்வொன்றும் முக்கியமானது என்று கூறுகிறது. மேலும் இது, நாம் உணர்ந்து அறிந்தாலும் இல்லையென்றாலும், நம்முடைய ஒவ்வொரு சிந்தனை, சொல் மற்றும் செயலும் நித்தியமான விளைவைக்கொண்டுள்ளது என்றும் கூறுகிறது (மத்தேயு 12:36ஐக் காணவும்).*

*எனது பலவீனம் மற்றும் பாவம் ஒவ்வொன்றும் மற்றவர்களின் பார்வைக்கு வெளிப்படுத்தப்பட்டு இருத்தல் என்பதைக் காட்டிலும் அதிகம் சங்கடமூட்டுவதாக - அல்லது சிறுமைப்படுத்துவதாக - அல்லது பயமுறுத்துவதாக - வேறொன்றையும் என்னால் நினைத்துப்பார்க்க முடியவில்லை. ஆகையால் "தேவனால் நினைவுகூரும்படியாக எவற்றை அவர் முடிவுசெய்துள்ளாரோ மற்றும் மறக்கும்படி அவர் எவற்றை முடிவுசெய்துள்ளாரோ, ... அவை அந்தப் பதிவேட்டுப் புத்தகங்களில் அடங்கியுள்ளவை தீர்மானிக்கப்பட்டுள்ளது''*[32] *என்று விரைவாகக் குறிப்பிட என்னை அனுமதியுங்கள். தேவனுக்கு நன்றி, சிலவற்றை மறப்பதாக அவர் வாக்குத்தத்தம் செய்துள்ளார் (எரேமியா 31:34; எபிரெயர் 8:12)! குறிப்பாக, அவர் தமது குமாரனுடைய இரத்தத்தினால் நீக்கப்பட்ட பாவங்களை நினைவுகூருவதில்லை (ரோமர் 5:9; எபேசியர் 1:7).*[33]

> *மார்ட்டின் லூத்தர் என்பவர் தமது கனவுகள் ஒன்றில், சுவர் அலமாரிகளில் வரிசையாக நிறையப் புத்தகங்கள் அடுக்கப்பட்டுள்ள ஒரு அறைக்குள் பிசாசானவன் வந்து, அவரை வாசிக்கச்சொல்லிக் கட்டளையிட்டதாக ஒருமுறை கூறினார். அந்தப் புத்தகங்கள் தமது வாழ்வின் பதிவேடாகவே இருந்தது என்பதை விரைவில் அவர் கண்டறிந்தார், அதுவும் அவை யாவும் அவரது சொந்தக் கைகளினாலேயே எழுதப்பட்டவைகளாய் இருந்தன. சாத்தான் ''இது உண்மையா? நீதான் இவற்றையெல்லாம் எழுதினாயா?'' என்று கேட்டான். பிசாசானவன் போவதற்காக அந்தப்புத்தகங்களைப் பொறுக்கும் வரையில் லூத்தர், தாம் பயமடைந்ததை, பரிதாபமாகவும் பேச்சற்றும் நின்றதை நினைவுகூர்ந்தார். பின்பு அவர், ''அது உண்மையே, அதன் ஒவ்வொரு வார்த்தையையும் எனது கைதான்*

எழுதிற்று, ஆனால் அவை யாவற்றின் குறுக்காவும் 'இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகலபாவங்களையும் நீக்கி சுத்திகரிக்கிறது' என்று எழுது" என்று கூவினார்.[34]

கிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்படுதல் என்பதைத் தவிர, கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறுவதற்குக் காரணம் வேறெதுவும் இல்லையென்றாலும், அதுவே போதுமானதாக இருக்கவேண்டும்! (நடபடிகள் 22:16), இரத்தத்தினால் தொடர்ந்து சுத்திகரிப்பைப் பெற்றுக்கொள்ளுதல் என்பதைத் தவிர, தேவனுடைய வசனத்தின் "வெளிச்சத்தில் நடப்பதற்கு"க் காரணம் வேறெதுவும் இல்லையென்றாலும், அதுவே போதுமானதாக இருக்கவேண்டும்! (1 யோவான் 1:7).

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முடிவுக்காலத்திற்கு அண்மையில், ஸ்வீடன் நாட்டு வேதியியலாளரான ஆல்ஃபிரெட் நோபல்[35] என்பவர், உள்ளூர் செய்தித்தாள் ஒன்றில் தமது சொந்த மரணத்திற்கான இரங்கல் செய்தியை வாசிக்கும்படி ஒருநாள் காலையில் விழித்தெழுந்தார்: "டைனமைட்டைக் கண்டுபிடித்த ஆல்ஃபிரெட் நோபல் அவர்கள் நேற்று இறந்துபோனார், இவர் இதற்கு முன்பு இல்லாத அளவு அதிகமான மக்கள் யுத்தத்தில் இறக்கும்படியான கண்டுபிடிப்பை வடிவமைத்தார், இவர் ஒரு பெரும் செல்வந்தராக இறந்துபோனார்."

உண்மையில், ஆல்ஃபிரெட் நோபலின் மூத்த சகோதரர்தான் இறந்துபோயிருந்தார்; செய்தித்தாள் நிருபர் ஒருவர் மரண வாசகச் செய்தியை குளறுபடி செய்திருந்தார்.

ஆனால் இந்த விபரமானது நோபல் மீது ஆழ்ந்தறிவுள்ள செயல்விளைவைக் கொண்டிருந்தது. அவர் மக்களைத் திறம்படக் கொலைசெய்யும் வழிமுறையை மேம்படுத்தியவர் என்றும் அந்தச் செயல்முறையில் செல்வங்களைச் சேர்த்துக் குவித்தவர் என்றும் அறியப்படுவதற்குப் பதிலாக, வேறுவகையில் அறியப்படவேண்டும் என்று விரும்பினார். எனவே அவர் நோபல் பரிசு என்ற ஒன்றை நிறுவி, சமாதானத்தை விளைவிக்கும் அறிவியல் அறிஞர்கள் மற்றும் எழுத்தாளர்களுக்கு வெகுமதி அளிக்கும் திட்டத்தை தோற்றுவித்தார்.

நோபல், "கால ஓட்டத்தின் மத்தியில் ஒவ்வொரு மனிதரும் தனது மரணவாசகத்தைத் திருத்தி புதிதாக எழுதுவதற்கு வாய்ப்பைப் பெற்றிருக்கவேண்டும்" என்று கூறினார்.[36]

அப்படிப்பட்ட வாய்ப்பு ஒன்றை இன்று நீங்கள் கொண்டு இருக்கின்றீர்கள். உங்கள் வாழ்வை அது முடித்துவிட்டது என்பதுபோல் கண்ணோக்குங்கள். நீங்கள் இப்போது இறப்பீர்கள் என்றால், நியாயத்தீர்ப்பில் உங்களைப் பற்றி வெளியரங்கமாக்கப்படுவது எதுவாக இருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள். நீங்கள் காண்பது உங்களுக்கு விருப்பம் இல்லையென்றால், உங்கள் வாழ்வின் பதிவேட்டை - அன்பும் கிருபையும் உள்ள கர்த்தரிடம் உடனடியாக ஓடிச்செல்வதன் மூலம் - "மாற்றி எழுதுங்கள்!"

*அந்த நாளில் பலர் ஒரு சிறு மாற்றத்தை ஏற்படுத்துவதற்காகத் தாங்கள் கொண்டிருந்த எல்லாவற்றையும் கொடுப்பார்கள் - ஆனால் அப்போது மிகவும் தாமதமாகியிருக்கும். ஆனால் இன்று நீங்கள் இயேசு கிறிஸ்துவின்மீது நம்பிக்கை வைத்து அவரது சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து, இவ்விதமாக, பதிவேட்டில் ஒரு சிறு பாகத்தில் மாத்திரமல்ல, ஆனால் முழுமையையும் மாற்றம் பெறச் செய்ய முடியும் - இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவி சுத்திகரிக்கப் படுவதன்மூலம்![37]*

**ஜீவபுத்தகம்**

*கடைசியாக ஒரு புத்தகம் திறக்கப்பட்டது: "ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது" (வசனம் 12இ).[38] ஜீவபுஸ்தகம் என்பது வெளிப்படுத்தின விசேஷம் முழுவதிலும் குறிப்பிடப்பட்டுள்ளது (3:5; 13:8; 17:8; 21:27[39]); இது தேவனுக்கு உண்மையுள்ளவர்களைப் பற்றிய பதிவேடாகும்.[40] "பழங்கால உலகத்தில் ஆட்சியாளர்கள், தங்கள் வட்டாரங்களில் குடிமக்களாய் இருந்தவர்கள் பற்றிய பதிவேடுகளைப் பராமரித்து வந்தனர், ஒரு மனிதன் இறக்கும்போதோ அல்லது குடிமகன் என்ற உரிமையை இழக்கும்போதோ மாத்திரமே அவனது பெயர் அந்தப் பதிவேட்டில் இருந்து நீக்கப்படும். ஜீவபுஸ்தகம் என்பது தேவனுக் குரியவர்களின் பெயர்கள் அடங்கிய பதிவேடு ஆகும்."[41] இதை வேறுவிதமாகக் கூறுவதென்றால், இந்தப் புஸ்தகம், இயேசுவின் இரத்தத்தினால் பாவங்கள் மூடப்பட்டவர்களின் பெயர்களைப் பட்டியலாகக் கொண்டுள்ளது.*

*நான் நியாயத்தீர்ப்பைப் பற்றிப் பிரசங்கிக்கும்போது, சிலவேளைகளில் நான், தேவனுடைய வசனத்தை மக்களின் வாழ்வுபற்றிய பதிவேட்டுடன் ஒப்பிடப்பட்டிருப்பதாகச் சித்தரித்து, அதன்பின்பு ஜீவபுத்தகமானது கடைசி அதிகாரத்துவம் என்ற வகையில் ஆய்வுச்செய்யப்பட்டிருப்பதாகச் சித்தரிப்பதுண்டு. 15ம் வசனம், "ஜீவபுஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டான்" என்று கூறுகிறதே. என்ன நடக்கும் என்று மிகச்சரியாக நாம் அறிந்திருப்பதில்லை என்று நாம் மீண்டும் ஒப்புக்கொண்டாக வேண்டும் - ஆனால் நாம் எவற்றை அறியவேண்டும் என்று தேவன் விரும்புகின்றாரோ, அவற்றை அறிகின்றோம். நாம் தேவனுக்கு முன்பாக நிற்கும்போது, புத்தகங்கள் திறக்கப்படும், நாம் அந்தப் புத்தகங்களில் உள்ளவற்றிலிருந்து, இந்த வாழ்வில் நாம் செய்துள்ளவற்றின்படியாக நியாயந்தீர்க்கப்படுவோம்.*

*நீங்கள் உங்கள் செயல்களுக்குத் தக்கவாறு நியாயந்தீர்க்கப்படுவீர்கள் என்பது நியாயத்தீர்ப்பைப் பற்றி நீங்கள் அறிய வேண்டிய நான்காவது உண்மையாக உள்ளது.*

## *நீங்கள் பரலோகத்திற்கோ அல்லது நரகத்திற்கோ அனுப்பப்படுவீர்கள் (20:14, 15)*

*மத்தேயு 25ல் உள்ள நியாயத்தீர்ப்புக் காட்சி, நீதிமான்கள் மற்றும் அநீதிமான்கள் ஆகியோரின் நித்திய அடைவிடங்கள் பற்றிப் பேசுகிறது:*

> *அப்பொழுது ராஜா தமது வலதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து: "வாருங்கள், என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானதுமுதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்" என்பார். ... அப்பொழுது இடது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து, அவர்: "சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்"; என்பார் ... அந்தப்படி இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் (மத்தேயு 25:34-46).*

*இருப்பினும், வெளிப்படுத்தின விசேஷம் 20:11-15ல், தேவனுடைய அன்பின் உடன்படிக்கைகளைப் புறக்கணித்திருப்பவர்கள்மீதே பாய்வுவெளிச்சம் வீசப்பட்டுள்ளது. 21 மற்றும் 22ம் அதிகாரங்களை நாம் திருப்பி, நீதிமான்களின் அடைவிடம் பற்றி வாசிப்பதற்கு முன்பு, சாத்தானைப் பின்பற்றுபவர்களுக்கு என்ன நேரிடும் என்பது நமக்குக் கூறப்படுகிறது.*

**மரணமும் பாதாளமும் இல்லாமல் போகுதல்**

*நமது வசனப்பகுதியின் கடைசிப்பிரிவு, "அப்பொழுது மரணமும் பாதாளமும் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டன" (வசனம் 14அ) என்று அறிவித்துத் தொடங்குகிறது. மரணமும் பாதாளமும் வெளிப்படுத்தின விசேஷத்தில், மனிதகுலம் முழுவதையும் விழுங்கும் நோக்கம்கொண்ட "அசாதாரணப் பசிகொண்ட திருப்திப்படுத்த முடியாத பெருமிருகங்கள்" என்று நபர்த்துவப்படுத்தப்பட்டுள்ளன.[42] நமது வேதவசனப்பகுதியின் 13ம் வசனத்தில், இவைகள் தங்களின் இரையைக் கக்கும்படிக்கு நிர்பந்திக்கப்பட்டன. இவைகளின் நோக்கம் நிறைவேறிய உடனே இவைகள் இல்லாமல் ஆக்கப்பட்டன. "பரிகரிக்கப்படுங்கடைசிச் சத்துரு மரணம்" என்று பவுல் கூறினார் (1 கொரிந்தியர் 15:26).*

*மரணமும் பாதாளமும் "அக்கினிக் கடலுக்குள்" தள்ளப்பட்டன. பின்பு இவ்வசனப்பகுதி, அந்த அடைவிடத்தைப் பற்றிப் பின்வரும் குறிப்பைக் கூடுதலாகத் தருகிறது: "இது இரண்டாம் மரணம்" (வசனம் 14ஆ).[43] வேதாகமத்தில் "மரணம்" என்ற வார்த்தை, பிரிவு என்ற கருத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது: உடலும் ஆவியும் பிரியும்போது உடல்ரீதியான மரணம் நேரிடுகிறது (யாக்கோபு 2:26), நமது பாவங்கள் நம்மைத் தேவனிடத்தில் இருந்து பிரிக்கும்போது ஆவிக்குரிய மரணம் நேரிடுகிறது (எபேசியர் 2:1; 1 தீமோத்தேயு 5:6; ஏசாயா 59:1, 2), மற்றும் "இரண்டாம்*

*மரணம்" என்பது தேவனிடத்தில் இருந்து நித்தியத்திற்கும் பிரிந்திருத்தலாக உள்ளது (2 தெசலோனிக்கேயர் 1:8, 9; மத்தேயு 7:23; 25:12 ஆகியவற்றைக் காணவும்)!*

**ஆயத்தமாக இராதவர்களின் அடைவிடம்**

*"இரண்டாம் மரணம்" என்பது "அக்கினிக் கடலில்" இருக்கும் (வசனம் 14அ). அடுத்த அதிகாரத்தில் நாம், "பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்" என்று வாசிக்கின்றோம் (21:8). சாத்தானின் கூட்டாளிகள் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டிருந்தனர் (19:20); சாத்தானும் அங்கு தள்ளப்பட்டிருந்தான் (20:10); இப்போது அது, பிசாசானவனையும் அவனது உடன் வேலையாட்களையும் தங்கள் வாழ்வை இயக்க அனுமதித்திருந்த வர்களுக்கு ஆயத்தமாக்கப்பட்டிருந்தது.*

*இந்தப் பயங்கரமான இடத்தை இயேசு, "அக்கினிச் சூளை" என்று அழைத்திருந்தார் (மத்தேயு 13:42). வேறொரு இடத்தில் இதை அவர் "புறம்பான இருள்" என்று குறிப்பிட்டிருந்தார் (மத்தேயு 22:13). சட்டப்படி, அக்கினியானது இருளுக்கு மாறாக வெளிச்சத்தை உண்டாக்குகிறது என்பதால், விவரிக்க இயலாதவற்றை விவரிப்பதற்கு இயேசு அடையாளத் துவத்தைப் பயன்படுத்தினார் என்பது உறுதி. இது நரகத்தினுடைய பயங்கரங்களைக் குறைப்பதில்லை, அனால் அதற்கு மாறாக அவற்றை அதிகமாக்குகிறது. இரவு வேளையின் பயங்கரங்களைத் திரும்ப நினைத்துப் பாருங்கள்; தீக்கொப்புளத்தால் ஏற்படும் வேதனையை நினைத்துப் பாருங்கள். அந்தப் பயங்கரத்தையும் வேதனையையும் கோடானகோடி முறை பெருக்கி, அவற்றை முடிவற்ற காலத்திற்கு நீட்டித்துப் பாருங்கள், அப்போதும்கூட, நரகம் உண்மையில் எப்படி உள்ளது என்பதை நீங்கள் விளக்கப்படுத்தி இருக்கமாட்டீர்கள்.*

*பலர் பரலோகம் இருப்பதை நம்ப விரும்புகின்றனர், ஆனால் நரகம் இருப்பதை நம்ப விரும்புவது இல்லை; இருப்பினும், ஒன்றைப் பற்றி வெளிப்படுத்துகிற அதே புத்தகம்தான் இன்னொன்றைப் பற்றியும் கூறுகிறது. நரகத்தைப் பற்றி வேதாகமம் கூறுவதை உங்களால் நம்பமுடியாதென்றால், பரலோகத்தைப் பற்றி அது கூறுவதையும் உங்களால் நம்பமுடியாதிருக்க வேண்டுமே. மனிதர்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், "அக்கினியும் கந்தகமும் எரிகிற கடல்" ஒன்று உள்ளது.*

*நமது வசனப்பகுதியானது இருதயத்தைப் பிளக்கச் செய்யும் ஒரு கூற்றுடன் முடிவடைகிறது. இதை நான் எனது ஆத்துமாவில் பாரம் வருதலில்லாது வாசிக்க முடியாது: "ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டான்" (வசனம் 15). ("நியாயத்தீர்ப்பின் காட்சி" என்ற விளக்க படத்தைக் காணவும்.)*

*எவரொருவரும் கெட்டுப்போக வேண்டும் என்று தேவன் விரும்புவதில்லை (2 பேதுரு 3:9). மக்கள் நரகத்திற்குச் செல்வதைத் தவிர்ப்பதற்கு அவர் தமது பங்குப் பணியைச் செய்திருக்கின்றார். பர்ட்டன் காஃப்மென் என்பவர், "எந்த மனிதரும் எந்தக் காலத்திலும் நாசமாகுதல் என்ற தண்டனையின் துன்புறுதலை அடையக்கூடாது என்றுதான், கிறிஸ்து தமது இரத்தம் சிந்தும் கரங்களை சிலுவையின்மீது விவரித்து வைத்தார்; ஆனால் இதைப் புறக்கணிப்பதைத் தேர்ந்துகொள்ளும் மனிதர்கள், தங்கள் தோல்வியின் விளைவுகளுக்கு முழுப்பொறுப்பையும் தாங்களே ஏற்றுக்கொண்டாக வேண்டும்"[44] என்று எழுதினார்.*

*நியாயத்தீர்ப்பு முடிவடையும்போது நீங்கள் பரலோகத்திற்கோ அல்லது நரகத்திற்கோ அனுப்பப்படுவீர்கள் என்பது நியாயத்தீர்ப்பைப் பற்றி நீங்கள் அறிய வேண்டிய ஐந்தாவது உண்மையாக உள்ளது.*

## முடிவுரை

*கிளென் பேஸ் என்பவருடைய பிரசங்கங்கள் ஒன்றின் முடிவில், ஒரு மனிதர், கர்த்தரிடத்திற்கு அவர் திரும்ப விரும்புவதாகக் கூறினார். அவர் பயங்கரமான கனவு ஒன்றைப் பற்றி பேஸ்ஸிடம் கூறினார்: அது நியாயத்தீர்ப்பு நாளாயிருந்தது, கர்த்தர் ஜீவபுத்தகத்திலிருந்து வாசித்துக் கொண்டிருந்தார். முதலில் ஒருவரிடமும் பின்பு மற்றொருவரிடமும் தேவன், "நன்கு செய்தாய்!" என்று கூறினார். இந்த மனிதரின் பெயர் இருக்க வேண்டிய இடத்திற்குக் கர்த்தர் வந்தார், ஆனால் இந்த மனிதர் தமது பெயர் வாசிக்கப்படுவதைக் கேட்கவில்லை. அவர் சிங்காசனத்தின் பின்புறமாகச் சென்று கர்த்தருடைய தோள்களுக்குமேலாகப் பார்வையை ஓட்டி ஜீவபுத்தகத்தைக் கண்ணோக்கினார். இவர் தமது பெயர் அழிக்கப்பட்டிருப்பதைக் கண்டு திகில் அடைந்தார். இம்மனிதர் பிரசங்கியாரிடத்தில், "கிறிஸ்தவன் என்ற வகையில் நான் என்ன செய்திருக்க வேண்டும் என்று அறிந்திருந்தேன், ஆனுல் அதைச்செய்வதற்கு நான் மறுத்துவிட்டேன். ஆனால் இப்போது நான் திரும்பிவர விரும்புகின்றேன். ஆட்டுக்குட்டியானவரின் ஜீவ புத்தகத்தில் எனது பெயர் திரும்பவும் இருக்க வேண்டும் என்று நான் விரும்புகின்றேன்" என்று அறிக்கையிட்டார்![45]*

*வெளிப்படுத்தின விசேஷம் 20ன் சில அம்சங்கள் புரிந்துணர மிகவும் கடினமானவைகளாக இருக்கின்றன, ஆனால் மாபெரும் தனிச்சிறப்புடைய பகுதியானது புரிந்துகொள்ளக் கடினமானதாக இருப்பதில்லை. ஜேய் லாக்ஹேர்ட் என்பவர் பின்வரும் மேன்மையான அறிவுரையைக் கொடுத்தார்: ''யூகம்செய்தல் என்ற உணர்வியத்தில் பிடிக்கப் பட்டிருப்பதற்கு மாறாக, நமது பெயர்கள் ஜீவபுத்தகத்தில் எழுதப்பட்டிருக்கின்றன என்பதில் நாம் உறுதியாய் இருக்கும்படி நிச்சயப்படுத்திக்கொள்வோமாக!"[46]*

*உங்கள் பெயர், ஜீவபுத்தகத்தில் உள்ளதா? நீங்கள் மனந்திரும்புதல் மற்றும் ஞானஸ்நானம் ஆகியவற்றின் மூலமாக இயேசுவின்மீது உங்கள் விசுவாசத்தை விளக்கப்படுத்தி இருக்கின்றீர்களா (நடபடிகள் 2:37, 38;*

*கலாத்தியர் 3:26, 27)? நீங்கள் தேவனுக்கு உண்மையுள்ளவராய் நிலைத்திருக்கின்றீர்களா (வெளிப்படுத்தின விசேஷம் 2:10; 3:5)? உங்கள் பெயரானது ஜீவபுத்தகத்தில் ஒருபோதும் சேர்க்கப்பட்டிருக்கவில்லை என்றால், அல்லது அது அழிக்கப்பட்டிருந்தால், காத்திருக்க வேண்டாம்; தயங்க வேண்டாம். இன்றே அதைப் பற்றிக் கவனம் எடுத்துக்கொண்டு செயல்படுங்கள்!*

---

## போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள் ஆகியோருக்கான குறிப்புகள்

W. B. *வெஸ்ட் ஜூனியர் என்பவர், வேதவசனங்களின் இப்பகுதிக்கு, "உலகத்தின் கடைசி நாள்" என்ற தலைப்பைப் பயன்படுத்தினார். யோவான் 6:39, 40, 44, 54 வசனங்களைக் குறிப்பிட்டு, இந்தப் பாடத்திற்கு "கடைசி நாள்" என்று தலைப்பிடப்படக்கூடும். "இவைகளுக்குப்பின்பு நியாயத்தீர்ப்பு வருகிறது" (எபிரெயர் 9:27) என்பது இன்னொரு நல்ல தலைப்பாக இருக்கும். "நியாயத்தீர்ப்பு," "கடைசித் திரை," மற்றும் "மரணத்தின் மரணம்" என்பவை சாத்தியக்கூறுள்ள மற்ற தலைப்புகளாய் இருக்கின்றன.*

*பல ஆண்டுகளுக்கு முன்பு நான், நியாயத்தீர்ப்பு நாளில் திறக்கப்படும் மூன்று புத்தகங்களைக் குறிக்கும் வகையில் (கறுப்புத் தளர்வட்டையுள்ள நோட்டுப்புத்தகங்களைக் கொண்டு) மூன்று புத்தகங்கள் கொண்ட தொகுதி ஒன்றைத் தயார் செய்தேன். அந்தப் புத்தகங்களுக்கு, "தேவனுடைய வசனம்," "செயல்களின் புத்தகம்"* ("Book of Works"[47]) *மற்றும் "ஜீவ புத்தகம்" என்று தலைப்பிடப்பட்டன. உள்ளிருந்த பக்கங்கள் நான் ஏற்படுத்த விரும்பிய கருத்துக்கள் எழுதப்பட்டவைகளாய் இருந்தன. இந்தப் புத்தகங்கள் பிரசங்க மேடையின்மீதும், இசை மேடையின்மீதும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. அந்தப் பிரசங்கத்தில் இருந்து சில கருத்துக்கள் பிற்பாடு, "புத்தகங்கள் திறக்கப்பட்டபோது" என்ற எனது எடுத்துரைப்புப் பிரசங்கத்தில் பயன்படுத்தப்பட்டன.*

---

*குறிப்புகள்*

[1]This story was adapted from Walter B. Knight, *Knight's Master Book of 4,000 Illustrations* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1956), 351. [2]Quoted in Clarence E. Macartney, *Macartney's Illustrations* (Nashville: Abingdon Press, 1946), 198-99. [3]G. B. Caird, *A Commentary on the Revelation of St. John the Divine (*London: Adam & Charles Black, 1966), 259. [4]T. F. Glasson, *The Revelation of John,* The Cambridge Bible Commentary on the New English Bible Series (Cambridge, England: Cambridge University Press, 1965), 113n. [5]*வெளிப்படுத்தின விசேஷம் 20:11-15ஐ தற்காலிக நியாயத்தீர்ப்பு என்று நடத்துகின்றவர்கள், பெரிய நியாயத்தீர்ப்பு நாள் ஒன்று இருக்கும் என்றும் வெளிப்படுத்தின விசேஷம் 20:11-15ல் உள்ள காட்சியானது கடைசி நியாயத்தீர்ப்பு*

*நாள் எப்படியிருக்கும் என்பதற்கு மாதிரியாக உள்ளது என்றும் ஒப்புக்கொண்டிருக்கும் வரையில் அவர்களிடத்தில் நான் பெரிய சண்டை/ விரோதம் எதுவும் கொண்டிருப்பதில்லை.* [6]Rubel Shelly, *The Lamb and His Enemies: Understanding the Book of Revelation* (Nashville: 20th Century Christian Foundation, 1983), 111. [7]W. B. West Jr., *Revelation Through First - Century Glasses*, ed. Bob Prichard (Nashville: Gospel Advocate Co., 1997), 145. [8]*யுகத்துவவாதிகளில் பலர் நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட நியாயத்தீர்ப்புகள் உண்டு என்று போதிக்கின்றனர். பல நியாயத்தீர்ப்புகள் உண்டு என்று "நிரூபிக்க" பயன்படுத்தப்பட்டுள்ள வசனப்பகுதிகள் பற்றிய ஒரு கலந்துரையாடலுக்குப் பின்வரும் புத்தகத்தில் காணவும்:* Frank Pack, *Revelation*, Part 2, The Living Word Series (Austin, Tex.: R. B. Sweet Co., 1965), 56-57. *(பல உயிர்த்தெழுதல்கள் பற்றிய ஒரு கலந்துரையாடலை, "கிறிஸ்துவுடன் ஆளுகை செய்தல்" என்ற முன்புள்ள பாடத்தில் காணவும்.)* [9]Edward A. McDowell, *The Meaning and Message of the Book of Revelation* (Nashville: Broadman Press, 1951), 201. [10]This sentence was adapted from Tommy South, "The Great White Throne," *Truth for Today* (January 1989): 20.

[11]*மத்தேயு 19:28; லூக்கா 1:32; நடபடிகள் 2:30; எபிரெயர் 1:8; 12:2; வெளிப்படுத்தின விசேஷம் 3:21; 12:5 ஆகிய வசனப்பகுதிகளைக் காணவும்.* [12]*மத்தேயு 25:31; யோவான் 5:22, 23; 2 தீமோத்தேயு 4:1; வெளிப்படுத்தின விசேஷம் 19:11 ஆகியவற்றையும் காணவும். நீதிமான்களுக்கு இயேசு, ஜீவகிரீடத்தையும், ஜீவவிருட்சத்தின் கனிகளை உண்ணும் உரிமையையும் கொடுப்பார் என்று வெளிப்படுத்தின விசேஷம் 2:7, 10 வசனங்கள் கூறுகின்றன. வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் இவ்விடம் வரையிலும் தேவனே சிங்காசனத்தின்மீது அமர்ந்துள்ளார் என்பதன்மீது வலியுறுத்தம் இருந்துள்ளது என்பதே, இயேசு நியாயாதிபதியாக இருக்கின்றார் என்ற கருத்திற்கு முதன்மையான மறுப்பாக உள்ளது. நியாயாசனத்தில் வீற்றிருப்பவர் பிதாவா குமாரனா என்பது பெரிய வித்தியாசம் எதையும் ஏற்படுத்தப்போவதில்லை; ஏனெனில் ஒருவர் செய்கிறது எதுவோ அதை இன்னொருவரும் செய்கிறதாகக் கூறமுடியும். இருவரும் ஒன்றாயிருக்கின்றனர் (யோவான் 10:30; 14:10). இது அவர்கள் ஒரே நபர் என்று அர்த்தப்படுத்துவதில்லை. மாறாக இது, பிதாவும் குமாரனும் "தேவத்துவம், நோக்கம் மற்றும் கிரியை" ஆகியவற்றில் ஒன்றாயிருக்கின்றனர் என்று அர்த்தப்படுகிறது* (Homer Hailey, *Revelation: An Introduction and Commentary* [Grand Rapids, Mich.: Baker Book House, 1979] 400). [13]Shelly, 112. [14]*சங்கீதம் 102:25, 26; ஏசாயா 40:8; 51:6; எபிரெயர் 1:10, 11; 12:27 ஆகிய வசனங்களைக் காணவும்.* [15]Bruce M. Metzger, *Breaking the Code: Understanding the Book of Revelation* (Nashville: Abingdon Press, 1993), 95. [16]Quoted in Craig Brian Larson, ed., *Contemporary Illustrations for Preachers, Teachers, & Writers* (Grand Rapids, Mich.: Baker Books, 1996), 123. [17]Metzger, 95. [18]KJV *வேதாகமத்தில்* "hell" *என்றுள்ளது, ஆனால் கிரேக்க வசனத்தில், இது* "Hades" *என்று ஒலிபெயர்க்கப்பட்ட வார்த்தையாக உள்ளது.* "Hades" *என்ற வார்த்தை "காணப்படாத" என்று நேரடியாக அர்த்தப்படுகிறது மற்றும் இது மரித்து, உருவமற்றுப்போனவர்களின் "காணப்படாத உலகத்தை" குறிக்கிறது. இயேசு மரித்த பின்பு அவரது ஆவி காணப்படாத உலகத்தில் இருந்தது (நடபடிகள் 2:31). காணப்படாத உலகம் பற்றிய மிகவும் விரிவான சித்தரிப்பு லூக்கா 16:19-31ல் காணப்படுகிறது.* KJV *வேதாகமத்தில் வெளிப்படுத்தின விசேஷம் 1:18 (மற்றும் 6:8; 20:13, 14 ஆகியவற்றில்)* "Hades" *என்பதற்கு பதிலாக* "hell" *என்றுள்ளது, இது குழப்பமூட்டுவதாக உள்ளது, ஏனெனில்* KJV *வேதாகமத்தில்,* gehenna *(துன்மார்க்கரின் நித்திய வாசஸ்தலம்) என்ற வார்த்தைகள்* "hell" *என்றே*

மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. Hades என்பது துன்மார்க்கரின் நித்திய வாசஸ்தலமல்ல. [19]Leon Morris, *Revelation,* rev. ed., The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1987), 235. [20]"வெளிப்படுத்தின விசேஷம், 2" என்ற புத்தகத்தில் "இடிமுழக்கக் குளம்பொலிகள்" மற்றும் "வியப்பெதுவும் இல்லை!" என்ற பாடங்களில் காணவும்.

[21]சில எழுத்தாளர்கள் 13அ வசனப்பகுதியை, தேவனுடத்தில் இருந்து நாம் ஒளிந்துகொள்ள இயலாது, "கடலின் ஆழங்களிலும்கூட" ஒளிந்துகொள்ள இயலாது என்று வலியுறுத்தும் வசனப்பகுதிகளுடன் உறவுபடுத்துகின்றனர். வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், தேவனுடைய நியாயத்தீர்ப்பில் இருந்து ஒளிந்து கொள்வதற்குப் பாவிகளுக்கு இடமே இருப்பதில்லை. [22]புதிய ஏற்பாட்டில், உயிர்த்தெழுதல் பற்றிய பெரும்பான்மையான வசனப்பகுதிகள் நீதிமான்களைப் பற்றியவைகளாக இருக்கின்றன. உயிர்த்தெழுந்திருத்தல் என்பது, மகிமையிலும் கனத்திலும் உயிர்ப்பிக்கப்படுபவர்களுக்கு மாத்திரமே மன எழுச்சியூட்டும் எதிர்நோக்காக உள்ளது. இருந்தபோதிலும், (இங்கு மேற்கோள் காண்பிக்கப்படுபவை போன்ற) பல வசனப்பகுதிகள், உயிர்த்தெழுதல் என்பது பொதுவானதாக இருக்கும் - நீதிமான்களும் அநீதிமான்களும் ஒரே வேளையில் உயிர்ப்பிக்கப்படுவார்கள் - என்று நாம் அறியச் செய்கிறது. [23]இந்த மக்கள், நீதிமான்கள் மரிக்கும்போது அவர்கள் நேரடியாகப் பரலோகம் செல்லுவார்கள் என்றே பொதுவாகப் போதிக்கின்றனர். கிறிஸ்தவர் மரிக்கும்போது அவர் ''கர்த்தரிடத்தில் இருக்கும்படி'' செல்லுகின்றார் என்று சில வசனப்பகுதிகள் (2 கொரிந்தியர் 5:8; பிலிப்பியர் 1:23) போதிப்பது உண்மையே; ஆயினும் அவ்வசனப்பகுதிகள், மரித்தவர்களின் இடைப்பட்டநிலையின்மீதான திட்டவட்டமான கூற்றை ஏற்படுத்துவதையல்ல, ஆனால் மரணம் என்பது உண்மை நிறைந்தவர்களின் வெற்றியாக உள்ளது என்பதை வலியுறுத்துவதையே நோக்கமாக கொண்டுள்ளன. நீதிமான்கள் நியாயத்தீர்ப்புநாளில் அங்கு இருக்கமாட்டார்கள் என்று நம்புகின்றவர்கள், விசுவாசிகள் "நியாயத்தீர்ப்புக்கு உட்படுவதில்லை" என்று கூறுகிற வசனப்பகுதிகளையும் குறிப்பிடுகின்றனர் (யோவான் 5:24); ஆனுல், அவ்வசனப்பகுதிகள் "நியாயத்தீர்ப்பு" என்ற சொற்றொடரை நியாயத்தீர்ப்புநாள் என்ற கருத்தில் அல்ல, மாறாக ஆக்கினைத்தீர்ப்பு என்ற கருத்திலேயே பயன்படுத்துகின்றன. காணப்படாத உலகம், உயிர்த்தெழுதல், மற்றும் நியாயத்தீர்ப்பு ஆகியவற்றின்மீதான பொதுவான வேதாகம போதனையானது, மரித்திருக்கின்ற யாவரும் இப்போது, நியாயத்தீர்ப்புக்காகக் காத்திருக்கின்றனர் என்றே கூறுகிறது. எடுத்துக்காட்டாக, "கர்த்தரிடம் குடியிருத்தல்" என்பது பற்றிய கூற்றைத் தொடர்ந்து, கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிற்குதல் பற்றிய கூற்று உடனடியாக வருவதை கவனியுங்கள் (2 கொரிந்தியர் 5:8, 10). இதற்கு மறுபுறத்தில் வேதாகமம், நீதிமான்கள் நியாயத்தீர்ப்புக்காகச் சந்தோஷமாய்க் காத்திருக்கின்றனர் (ஏனெனில் அவர்கள் இயேசுவின் இரத்தத்தினால் மீட்கப்பட்டுள்ளதை அறிந்து இருக்கின்றனர்), அதே வேளையில் அநீதிமான்கள் நம்பிக்கையிழந்த நிலையில் சந்தோஷமின்றி இருக்கின்றனர் (லூக்கா 16:19-31) என்று போதிக்கிறது. [24]ஏற்கனவே வலியுறுத்தப்பட்டபடி, சாத்தானையும் இரண்டு மிருகங்களையும் பின்பற்றியவர்களின் நித்திய அடைவிடத்தைக் காண்பித்தல் என்பதே வெளிப்படுத்தின விசேஷம் 20:11-15ன் முதன்மை நோக்கமாக உள்ளது. (விசுவாசிகளின் அடைவிடம்பற்றி 21 மற்றும் 22 ஆகிய அதிகாரங்களில் கலந்துரையாடப்படுகிறது.) [25]உதாரணமாக, பெரியோரும் சிறியோரும் சிங்காசனத்தின்முன்பாக நிற்பார்கள்; மரணம், பாதாளம் மற்றும் சமுத்திரம் ஆகியவற்றினால் பிடித்து வைக்கப்பட்டிருந்த யாவரும் கர்த்தருக்கு முன்பாக

*நிற்பார்கள்.* [26]*உண்மையுள்ளவர்களை பொறுத்தமட்டில், நீதியை சரிக்கட்டுதல் என்பதே நியாயத்தீர்ப்பு நாளின் நோக்கமாக உள்ளதென்று காணப்படுகிறது. நியாயமற்ற முறையில் குற்றஞ்சாட்டப்பட்டு, தங்கள் குற்றமற்ற தன்மையைக் காண்பிக்கத் தங்களுக்கு "நீதிமன்றத்தில் ஒருநாள்" வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்று விரும்பிய மக்கள் சிலரை நான் அறிவேன்.* [27]*"மரணத்தில் இருந்து ஒரு தனிநபர் தனது நிலை என்ன என்றும் தனது அடைவிடம் எதுவாக இருக்கும் என்பதையும் அறிந்திருப்பார் என்றால், நியாயத்தீர்ப்பு என்ற ஒன்று இருக்க வேண்டியது ஏன்?" என்ற கடினமான கேள்வியென்றுள்ளது. (லூக்கா 16:19-31ஐக் காணவும்.) நியாயத்தீர்ப்பு நாள் பற்றி கைப்பிரதியொன்றில் நான், பின்வரும் பதிலை முன்மொழிந்துள்ளேன்: "இது குற்றமுள்ள தன்மையா அல்லது குற்றமற்ற தன்மையா என்று தீர்மானிக்கும் விஷயமாக இருப்பதில்லை. ஆனுல், அது நீதியைக் காண்பித்தலும் தண்டனை விதித்தலுமாக இருக்கிறது"* ("When the Books Were Opened" [Pasadena. Tex.: Haun Publishing Co., n.d.], 9). *ஹோமர் ஹெய்லி என்பவர், ''அந்த நிகழ்ச்சியானது அடிப்படையில், நீதிமான்களுக்கு வெகுமதிகளும் துன்மார்க்கருக்குத் தண்டனையும் அளித்தல் என்பதாக இருக்கிறது" என்று கருத்துத் தெரிவித்தார் (399).* [28]*தானியேல் 7:10ஐக் காணவும். அங்கு, புத்தகங்கள் மிருகத்தைப் பற்றிய நாசமாக்கும் தகவலைக் கொண்டிருந்தன என்பது தெளிவு.* [29]*எரேமியா 17:10; மத்தேயு 25:34-36; 2 கொரிந்தியர் 5:10; 11:15; 2 தீமோத்தேயு 4:14 ஆகிய வசனப்பகுதிகளைக் காணவும்.* [30]Robert Mounce, *The Book of Revelation*, The New International Commentary on the New Testament Series (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1977), 366.

[31]Albertus Pieters, *Studies in the Revelation of St. John* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1954), 313. [32]Caird, 259. [33]*"நினைவுகூருதல்" என்பது ஒரு தகவமைக்கும் கருத்தமைவில் பயன்படுத்தப்பட்டுள்ளது. தேவன் நமது ''பாவங்களை'' நினையாதிருப்பேன் என்பது, பிற்பாடு அவர் நம்முடைய பாவங்களை நமக்கு எதிராகக் கொண்டுவருவதில்லை என அர்த்தப்படுகிறது; ஒரு முறை நமது பாவங்கள் மன்னிக்கப்பட்ட பின்பு, அவர் அவற்றை நமக்கெதிராக மீண்டும் கொண்டுவருவதில்லை.* [34]Harold Hazelip, *The Lord Reigns: A Survey of the Book of Revelation* (Abilene, Tex.: Herald of Truth, n.d.), 22. [35]*இந்தப் பெயர்* "No-bell" *என்று உச்சரிக்கப்படுகிறது.* [36]Craig Brian Larson, ed., *Illustrations for Preaching and Teaching* from Leadership Journal (Grand Rapids, Mich.: Baker Books, 1993), 123. [37]Roper, 15. [38]*இந்தக்கூற்றை, விடுவிக்கப்படுபவர்களின் பதிவேட்டைப் பற்றி பேசுகின்ற தானியேல் 12:1உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்.* [39]KJV *வேதாகமத்திலும் 22:19ல் "ஜீவ புஸ்தகம்'' என்ற சொற்றொடர் உள்ளது, ஆனால் மேன்மையான கையெழுத்துப்பிரதிகளில் ''ஜீவ விருட்சம்'' என்றே அவ்வசனத்தில் உள்ளது.* [40]*"வெளிப்படுத்தின விசேஷம், 2" என்ற புத்தகத்தில் "கடந்த காலத்தில் ஜீவித்திருந்த சபை" என்ற பாடத்தில், ஜீவ புத்தகம் பற்றிய கலந்துரையாடலைக் காணவும். இப்பாடத்தில் நீங்கள், ஜீவபுத்தகத்தைப் பற்றி வேதாகமம் கூறுபவற்றை மறுகண்ணோட்டமிட விரும்பலாம்.*

[41]William Barclay, *The Revelation of John*, vol. 2, rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1976), 95. [42]This sentence and the next were adapted from Henry B. Swete, *The Apocalypse of St. John* (Cambridge: MacMillan Co., 1908; reprint, Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., n.d.), 273. [43]*"இரண்டாம் மரணம்" என்ற சொற்றொடர் முன்னதாக, சிமிர்னாவுக்கு எழுதப்பட்ட கடிதத்தில் பயன்படுத்தப்பட்டது (2:11). "வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் "செல்வத்துடன் இருந்த ஏழை சபை" என்ற பாடத்தில் காணவும்.* [44]Burton Coffman,

*Commentary on Revelation* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1979), 478. மூழ்கிக்கொண்டிருக்கும் ஒரு மனிதனிடத்தில் நீங்கள் ஒரு உயிர்காப்புக்கருவியை வீசியெறிந்தும், அதைப்பற்றிப் பிடித்துக்கொள்ள அவன் மறுத்துவிட்டால், அவன் தனது செயலுக்கு தானே பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டியவனாய் இருப்பான். [45]இந்த நிகழ்ச்சி, அர்க்கன்சாஸின் ஜட்சோனியாவில் உள்ள கிறிஸ்துவின் சபையில், 1997ம் ஆண்டு ஜனவரி மாதம் 5ம் நாளில், கிளென் பேஸ் என்ற சகோதரர் பிரசங்கத்தில் உரைக்கப்பட்டது. [46]Jay Lockhart, "The Millennial, 2" *Truth for Today* (January 1989): 18. [47]நான் இந்தப் புத்தகங்களை இன்றைய நாட்களில் தயார்செய்தால், அனேகமாக, "Record of Deeds" என்ற சொற்றொடரைப் பயன்படுத்துவேன்.

## மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

1. வெளிப்படுத்தின விசேஷம் 20:11-15ன் முதன்மை நோக்கம் என்ன? இது உங்களுக்குச் செய்தியொன்றைக் கொண்டுள்ளதா?
2. இந்தப் பாடத்தின்படி, நியாயத்தீர்ப்பைப் பற்றி நீங்கள் அறியவேண்டிய முதல் உண்மை என்ன?
3. வேதாகமத்தின்படி, கடைசி நியாயத்தீர்ப்பு நாட்கள் என்பவை எத்தனை உள்ளன?
4. நியாயத்தீர்ப்பைப் பற்றி நீங்கள் அறிய வேண்டிய இரண்டாவது உண்மை என்ன?
5. வெளிப்படுத்தின விசேஷம் 20:11ல் சிங்காசனத்தில் வீற்றிருப்பது யார் என்பது பற்றி நீங்கள் நினைப்பது என்ன? தேவனா அல்லது இயேசுவா என்பது வித்தியாசம் எதையாவது ஏற்படுத்துகிறதா?
6. நியாயத்தீர்ப்பைப் பற்றி நீங்கள் அறிய வேண்டிய மூன்றாவது உண்மை என்ன?
7. மரித்த நல்லவர்கள் துன்மார்க்கர் யாவரும் உயிர்ப்பிக்கப்படும் பொதுவான உயிர்த்தெழுதல் உண்டு என்று போதிக்கிற ஒன்று அல்லது அதற்கு அதிகமான வசனப்பகுதிகளைப் பட்டியலிடத் தயாராக இருங்கள்.
8. நியாயத்தீர்ப்பின் நாளில் நீதிமான்கள் கர்த்தருக்கு முன்பாக நிற்பார்களா?
9. நியாயத்தீர்ப்பைப் பற்றி நீங்கள் அறிய வேண்டிய நான்காவது உண்மை என்ன?
10. நியாயத்தீர்ப்பின் நாளில் திறக்கப்படும் "புத்தகங்கள்" யாவை?
11. நாம் எந்தக்கருத்தில், ''நமது செய்கைளுக்கேற்ற வகையில்'' நியாயந்தீர்க்கப்படுவோம்?
12. உங்கள் வாழ்வுபற்றிய பதிவேட்டில் பாவம் நிறைந்த உங்கள் செயல்கள் தோற்றம் அளிக்காது இருப்பதை நீங்கள் எவ்வாறு உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்?
13. நியாயத்தீர்ப்பைப் பற்றி நீங்கள் அறிய வேண்டிய ஐந்தாவது உண்மை என்ன?

14. நரகம் என்று அழைக்கப்படும் இடத்தின் உண்மை நிலைபற்றி வேதாகமம் போதிக்கிறதா?
15. நரகத்தைப் பற்றி விவரிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்றொடர்கள் உருவகமானவைகளாய் இருந்தால், நரகம் என்பதே உருவகமானதுதானா, அதாவது நரகம் என்பது "உண்மையில் அவ்வளவு மோசமானது அல்ல" என்று அர்த்தமாகிறதா?
16. நீங்கள் நரகத்திற்குச் செல்ல விரும்புகின்றீர்களா? நீங்கள் அங்கு செல்லமாட்டீர்கள் என்று உங்களால் எவ்வாறு உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்?



*நான்காவது குதிரையில் ஏறியிருந்தவன் (6:8)*



நியாயத்தீர்ப்பின் காட்சி (20:11-15)